வணிகக்கல்வி

காப்புறுதி



e-தக்சலாவ கல்விக்கூடம்™
The National e-learning Portal for The General Education
Start Your Learning Journey with e-thaksalawa

தேர்ச்சி 8.0 : வணிகங்களின் வாழ்தன்மைக்கு காப்புறுதித் தேவைப்பாட்டினை உறுதிசெய்வார்.

தேர்ச்சி மட்டம் 8.1 : வணிகங்களின் வாழ்தன்மைக்கு காரணமாக அமையும் காப்புறுதிச் சேவையின் முக்கியத்துவத்தை கேட்டறிவார்.

இடர்



காப்புறுதியில் பணரீதியாக அளவிடக்கூடிய இழப்பொன்று ஏற்படும் சந்தர்ப்பம் இடர் எனப்படும்.

வணிக நடவடிக்கை ஒன்றின் போது பல்வேறு முறைகளில் ஏற்படும் இடர்கள்



வணிக நிறுவனம் தீப்பற்றுதல்



வணிகத்தின் சொத்துக்களிற்கு ஏற்படும் சேதம்



கள்வர்கள் பொருட்களை



பொருட்கள் துருப்பிடிப்பதால் பெறுமதி குறைதல்



முகாமையாளரின் பிழையான தீர்மானங்களால் வணிகம் நட்டமடைதல்



பெற்றோல் போன்ற பொருட்கள் ஆவியாவதால் ஏற்படும் நட்டம்

காப்புறுதி



எதிர்பாராத விதமாக ஏற்படுகின்ற இடருக்கு நிதி ரீதியான இழப்பீட்டை பெற்றுக்கொள்வதற்காக தவணைக்கட்டணங்களைச்செலுத்தி காப்புறுதி செய் வோனும் காப் புறுத் துவோனும் (காப் புறுதி நிறுவனமும்) ஏற்படுத்திகொள்ளும் உடன்படிக்கையொன்று காப்புறுதியாகும்



இடர்கள் இருவகைப்படும்

- காப்புறுதி செய்யக்கூடிய இடர்கள்
- காப்புறுதி செய்யமுடியாத இடர்கள்

தொகுப்பு :- திருமதி.நிமால் சிவாஜினி, வணிகக்கல்வி ஆசிரியர், வ/புதுக்குளம் மகாவித்தியாலயம்

கணினி வடிவமைப்பு :- திரு.இ.மத்தியூஸ் டியோனி, த.தொ.தொ ஆசிரியர், மு/ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம்

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

காப்புறுதி செய்யக்கூடிய இடர்கள் கொண்டிருக்க வேண்டிய பண்புகள்

- இடரை எதிர்வு கூறக்கூடியதாக இருத்தல்
- எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய இடரினை பணரீதியாக அளவிடக்கூடியதாக இருத்தல்
- இடரானது நிச்சயமாக ஏற்படகூடியதல்லாததாக இருத்தல் (ஏதேச்சையாக நட்டம் ஏற்படுதல்)
- ஏற்பட்ட நட்டமானது வேறு காப்புறுதி செய்யக்கூடிய நட்டங்களுடன் தொடர்பற்றிருத்தல் வேண்டும்
- உறுதிப்படுத்தக்கூடியதாக இருத்தல் அதாவது நட்டம் ஏற்படக்கூடிய காரணம் காலம், இடம், பெறுமானம் என்பன பகுப்பாய்வு செய்யக்கூயதாக இருத்தல்



காப்புறுதி செய்யக்கூடிய இடர்களுக்கான உதாரணங்கள்

1. கட்டடம் தீப்பற்றுதல்
2. வாகனம் விபத்துக்குள்ளாதல்
3. வழிப்பறி பணக்கொள்ளை மூலம் இடம்பெறும் இடர்
4. கடன்பட்டோரிடம் பணம் பெற்றுக்கொள்ளமுடியாமல் போதல்

Copyright www.e-thaksalawa.moe.gov.lk

தொகுப்பு :- திருமதி.நிமால் சிவாஜினி, வணிகக்கல்வி ஆசிரியர், வ/புதுக்குளம் மகாவித்தியாலயம்

கணினி வடிவமைப்பு :- திரு.இ.மத்தியூஸ் டியோனி, த.தொ.தொ ஆசிரியர், மு/ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம்

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk



காப்புறுதி செய்யமுடியாத இடர்கள்



- வணிகம் நட்டமடைதல்
- சொத்துக்கள் தேய்வடைதல்
- சில பொருட்கள் ஆவியாதல்/ பழுதடைதல்
- தனது திறன், பலவீனங்களினால் ஏற்படும் விளைவுகள்
- வடிவமைப்பு மாற்றத்தால் ஏற்படும் இடர்

விடயஆய்வு ஒப்படை 01

மாணவர்களிற்கு பின்வரும் இடர்கள் முன்வைக்கப்படுகின்றன அவற்றிலிருந்து காப்புறுதி செய்யகூடிய இடர்கள், காப்புறுதி செய்யமுடியாத இடர்கள் என அட்டவணை ஒன்றின் மூலம் தயாரித்துக்காட்டுக.

1.கள்வர் வீட்டிற்குள் புகுந்து 500000 ரூபா பெறுமதியான தங்க ஆபரணங்கள் களவெடுத்தல்
2.மாணவரொருவர் இருதடவைகளும் க.பொ.த.உயர்தர பரீட்சையில் சித்தியடையவில்லை
3.நேசிக்கு சொந்தமான 200000 ரூபா பெறுமதியான மோட்டார் வண்டி விபத்திற்குள்ளாதல்
4.வணிகத்திற்கு சொந்தமான தளபாடம் 10000 ரூபா தேய்வடைதல்
5.50000 ரூபா பெறுமதியான இரும்புகம்பிகள் துருப்பிடித்ததன் காரணமாக 40000 ரூபாவாக பெறுமதி மதிப்பிடப்பட்டுள்ளது
6.கடன்பட்டவரிமிருந்து பெறவேண்டிய 20000ரூபா கிடைக்காமல்விடல்
7.கொள்வனவு செய்த லொத்தர்சீட்டு வெல்லப்படவில்லை
8.மாணவரொருவருக்கு ஆசிரியரின் அன்பு கிடைக்காமை
9.காட்டுயானையின் தாக்குதலால் 2000000 பெறுமதியான வீடு சேதமடைதல்
10.ரூபா 5000000 பெறுமதியான பொருட்களும் வணிக நிறுவனமும் தீயினால் முற்றாக சேதமடைதல்



தொகுப்பு :- திருமதி.நிமால் சிவாஜினி, வணிகக்கல்வி ஆசிரியர், வ/புதுக்குளம் மகாவித்தியாலயம்

கணினி வடிவமைப்பு :- திரு.இ.மத்தியூஸ் டியோனி, த.தொ.தொ ஆசிரியர், மு/ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம்

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

வணிக நிறுவனமொன்றின் நீடித்த வாழ்வுத்தன்மைக்கு காப்புறுதியின் முக்கியத்துவம்

- வணிக இடர்கள் காப்புறுதி இழப்பினுள் உள்வாங்கப்படுவதனால் வணிகங்கள் ஆரம்பிப்பதற்கு முதலீட்டாளர்கள் தூண்டப்படுகின்றார்கள்
- ஊழியர்களிற்கு அங்கவீனம், இறப்பின் போது இழப்பீடு பெற்றக்கொள்ள முடிவதால் ஊழியர்கள் உளரீதியாக பாதுகாப்புடன் தொழிலில் ஈடுபடல்
- தீ அபாயக் காப்புறுதியிலிருந்து இழப்பீடு பெறப்படுவதால் தீயினால் ஏற்படும் வணிக இழப்புக்கள் ஈடுசெய்யப்படுகின்றன
- களவு அபாயக் காப்புறுதியின் மூலம் களவு நட்டம் ஈடுசெய்யப்படுகின்றது
- நம்பிக்கை விசுவாசக் காப்புறுதி மூலம் நம்பிக்கை மோசடிகளில் இருந்து வணிக உரிமையாளர்கள் பாதுகாக்கப்படுகின்றனர்
- கடலபாயக் காப்புறுதின் மூலம் சர்வதேச வியாபாரம் விருத்தியடைகின்றது





காப்புறுதி ஒப்பந்தம் என்பது.....

காப்புறுதிப் பாதுகாப்பொன்றை பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கும் நபர் ஒருவரினால் சமர்ப்பிக்கப்படும் காப்புறுதி முன்மொழிவு பத்திரமொன்றை காப்புறுதி நிறுவனத்தின் மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்டதன் பின்னர் அவ்விரு பிரிவினருக்குமிடையே ஏற்படுத்திக்கொள்ளும் எழுத்து மூல உடன்படிக்கையே காப்புறுதி ஒப்பந்தமாகும்.

தொகுப்பு :- திருமதி.நிமால் சிவாஜினி, வணிகக்கல்வி ஆசிரியர், வ/புதுக்குளம் மகாவித்தியாலயம்

கணினி வடிவமைப்பு :- திரு.இ.மத்தியூஸ் டியோனி, த.தொ.தொ ஆசிரியர், மு/ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம்

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

காப்புறுதி ஒப்பந்தமொன்றுடன் தொடர்புடைய தரப்பினர்கள்

முதலாம் தரப்பினர்/ காப்புறுதிசெய்பவர்

காப்புறுதியின் முன்மொழிவை சமர்ப்பிக்கும் காப்புறுதி பாதுகாப்பை பெற்றுக்கொள்ளும் நபர்



இரண்டாம் பிரிவினர் காப்புறுத்துவோன்

காப்புறுதியின் முன்மொழிவுகளை ஏற்றுக்கொள்ளும் தரப்பு அதாவது காப்புறுதிக்கம்பனி



மூன்றாம் தரப்பினர்

ஒப்பந்தத்துடன் நேரடியாகதொடர்பு படாது ஒப்பந்த செயற்பாட்டினுடாக நன்மையை பெற்றுக்கொள்ளும் நபர்



காப்புறுதி ஒப்பந்தமொன்று செல்லுபடியாவதற்கு கொண்டிருக்கவேண்டிய அம்சங்கள்



தொகுப்பு :- திருமதி.நிமால் சிவாஜினி, வணிகக்கல்வி ஆசிரியர், வ/புதுக்குளம் மகாவித்தியாலயம்

கணினி வடிவமைப்பு :- திரு.இ.மத்தியூஸ் டியோனி, த.தொ.தொ ஆசிரியர், மு/ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம்

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk